
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ்

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் குழைத்த பத்து

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்

இதுனுள்ளே. . . . . .

1. வினைப் பதிவுகளை மாற்றி அமைக்கலாமா?
2. வினைத் தூய்மையும் மனத்தூய்மையும்
3. குற்றமும் குணமும் மனித இயல்பு
4. அறியாமையை அகற்றலாமா?
5. அனைத்தும் சுத்தவெளியே!
6. செயலுக்குத்தக்கபடி தான் இறைவன் கொடுப்பான்
7. நன்றும் பிழையும் நீயே செய்வாய்!
8. ஆண்டவன் போடும் கணக்கு
9. உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு.
10. பெரிய பதம்எனக்கு வேண்டும்

பழையக் கொடுவினைகள் தம்மைத் தொடர்ந்து வருத்தும் இன்னலுக்கு ஆற்றாது வருந்தினார் மாணிக்கவாசகர்.

அத்துன்பங்களுக்குக் காரணமாகத் தாம் செய்த பிழைகளை நினைந்து நினைந்து இரங்கினார்.

இறைவனது அன்பையும் கருணையையும், தாம் பெற வேண்டும் என இறைவனை நோக்கி மனம் உருகி உருகி அரற்றிக் கூறும் முறையீடாக அமைந்தது “குழைத்த பத்து” என்னும் இப்பதிகமாகும்.

இவ் யாக்கையைத் தாங்கி வினைகளை மேலும் மேலும் இழைத்தேன்: இனிக் கணமும் பொறுக்கேன்; அடியேனை மெலிவிப்பது எற்றுக்கு? பிழை பொறுத்து ஆட்கொள்ளவேண்டும் என்று இரங்கிக் கூறுதல் குழைத்த பத்தாம் என்று கூறும் திருப்பெருந்துறைப் புராணம்.

இப்பதிகத்திற்கு "ஆத்ம நிவேதனம்-நேயத்தோடு ஒன்றல்" என்பது பழையகுறிப்பு. தனக்கென்று ஓர் உரிமை.

## 1.வினைப் பதிவுகளை மாற்றி அமைக்கலாமா?

ஆடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு என்பது வள்ளுவம்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

நாமும் இறைவனிடம் பேசும் மொழியாகிய மௌனத்தில் இருந்து, துரியாதீத தவத்தில் இறைவனிடம் நட்பு கொண்டால் நிச்சயமாக நமது துன்பத்தை களைவான்.

"குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோஎன்று
அழைத்தால் அருளா தொழிவதே
அம்மானே உன்னடி யேற்கே. (திருவாச.பா.496)

என்னை அடிமையாக உடையவனே! உமையாள் கணவனே! பிறைச் சந்திரனைச் சூடிய சடையை உடையவனே! தந்தையே!

பழைய கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டும்போது காப்பாற்றுவாயாக!

முயற்சி செய்தால் மட்டும் பயன் விளையுமா?

அடியேன் பிழை செய்தால் பொறுத்துக் கொள்ள வேண்டியது உனது கடமை அல்லவா?

துன்ப காலத்தில் கூவி அழைத்தால் நீ உதவிக்கு வராது இருக்கலாமா? இது முறையோ? கூறுவாயாக!" என்று மாணிக்கவாசகர் முறையிடுகிறார்.

பழைய கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டும்போது காப்பாற்றுவாயாக!" என வேண்டும் மாணிக்கவாசகருக்கு- வினைப் பதிவு பற்றி தெளிவுபடுத்துகிறது வேதாத்திரியம்.

"முன்னோர் செய்த வினைப்பதிவு வித்தில் உண்டு
மூளையிலே உன் செயலின் பதிவனைத்தும் உண்டு.
பின்னேநீ செய்வினைக்குப் புலனைந்தும் இயக்கிப்
பெற்ற பழக்கப்பதிவு உண்டு இம்மூன்றும்,
உன்னைநீ உள்ளுணரும் அகத்தவத்தை ஆற்றி,
ஒவ்வொன்றாய்ப் பழிப்பதிவை அகற்றிவர வேண்டும்.
தன்னில் பதிவான வினைப் பதிவுகளைமாற்றி,
தணிக்க பொருள், செல்வாக்குப் பயனாகாதுணர்வீர்"
(ஞாக.பா.1283)

மனிதர்கள் அனைவரும் இருபத்தி மூன்று ஜோடி குரோமோசோம்களால் உருவாகியிருக்கிறார்கள்.

அதில் ஒரு ஜோடி குரோமோசோம்கள் பாரம்பரியமான தன்மைகளை எல்லாம் உள்ளடக்கமாகப் பெற்றுள்ளதாக மருத்து விஞ்ஞானம் சொல்லுகிறது.

நம்முடைய முன்னோர்கள் உடலையும் மனதையும் இயக்கிப் பெற்ற செயல் பதிவுகள் அனைத்தும் நமது பெற்றோர் மூலம் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் தரத்தை அடிப்படையாகக் கொண்டு பி றந்தது முதல் இதுவரையில் செய்த அனைத்துப் பதிவுகளும் மூளை செல்களில் எண்ணமாக உள்ளது.

அந்த எண்ணங்களே சொல்லாக, செயலாக, விளைவாக, பழக்கமாக வழக்கமாக மலர்ச்சி பெற்று ஐந்து புலன்கள் மூலம் செயல்களாற்றிப் பெற்ற அனுபவப் பதிவுகளும் உள்ளன. அவற்றில் நல்வினை தீ வினை என்ற இரு பிரிவுகளும் உள்ளன.

தன்னை அறியும் உள்ளுணர்வு தவமாகிய அகநோக்குப் பயிற்சி செய்து பாவப் பதிவுகளாகிய பழிச் செயல் பதிவுகளை நீக்கி வர வேண்டும்.

பொருளோ செல்வாக்கோ தீ வினைகளாகிய பழிச்செயல் பதிவுகளை மாற்றிக் கொள்வதற்கும் குறைத்துக் கொள்வதற்கும் பயன்படாது என்பதை உணர்வீர்களாக.

# 2. வினைத் தூய்மையும் மனத்தூய்மையும்

முன்பிறவி வினையை உயிர் துய்ப்பதற்காகவே இந்தத் தேகம். வினை. பிறவி வாராது. 'வினைப் போகமே இந்தத் தேகம் கண்டாய்" என்று பட்டினத்தார் சொல்கிறார்.

“வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவும்நில் லாதுகண் டாய்சிவன் பாதம்நினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிஇந் நெறியினின்றால்
உனைப்போல் ஒருவருண் டோமன மேயெனக் குற்றவரே”

*ஒருவனுடைய மகன் வியாபாரம் செய்யப் புகுந்து அறியாமையால் கடன் வாங்கிச் சுமையை ஏற்றிக் கொள்கிறான்.

கருணையுடைய தந்தை மகனுக்குப் பொருளைத் தந்து, ‘கடனையெல்லாம் போக்கி விட்டுச் சாமர்த்தியமாக வியாபாரம் செய்து பொருளை ஈட்டு’ என்று சொல்கிறான்.

அறிவற்ற அந்தப் பிள்ளை தந்தை தந்த பொருளைக் கொண்டு பழைய கடன்களைக் கொடுத்து மீண்டாலும், மறுபடியும் தன் அறியாமையால் புதிய கடன்களை வாங்கி இன்னல் அடைகிறான்,

இறைவன் நமக்கு இந்தப் பிறவியை அளித்து, தனு கரண புவன போகங்களை வழங்கி, பழைய வினையைப் போக்கிக் கொண்டு வினையற்றவனாக “வா” என்று அனுப்புகிறான்.

நாமோ பழைய வினையை அனுபவித்துக் கழித்துக் கொண்டிருக்கும் போதே புதிய வினைகளைச் சேர்த்துக் கொள்கிறோம்; வினைகளை அழிக்காமல் தூய்மை செய்யாமல் இருக்கிறோம்.

“வினை எனும் சரக்குக் கொண்டேன்;

அழித்திலேன்.

பொருளெல்லாம் அழிந்துக் கடனில் மூழ்கித் தத்தளிக்கும் போது, ‘இனி என்ன செய்வது?’ என்று அயர்ந்து நிற்கிறோம், கடன் சுமையினின்றும் நீங்க வழி தெரியாமல் அலமந்து செயலொழிந்து அயர்ந்து வாடுகிறோம்.

மாணிக்கவாசகரும் வினைகளை சுமந்து கொண்டிருக்கும் இந்த உடலை அழிக்கலாமா? என கேட்கிறார்.

“அடியேன் அல்லல் எல்லாம் முன்
  அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியேர் இடையாள் கூறாஎம்
  கோவே ஆஆ என்று அருளிச்
செடிசேர் உடலைச் சிதையாதது

எத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே” . (திருவா.பா.497)

கொடி போன்ற இடையினை உடைய உமை பாகனே! எம் அரசே! எங்கள் சிவலோக நாதனே! என்னை அடிமையாக உடையவனே!

அடியேனது துன்பம் முழுவதும் தீருமாறு ஆட்கொண்டாய் என்றுதான் நினைத்துக் கொண்டு இருந்தேன்.

ஐயகோ! என வருந்துமாறு வினைகள் சேர்வதற்கு இடமாக விளங்கும் உடலை அழிக்காதது ஏன்? எங்களைக் கூவி அழைத்து ஏவல் கொள்ளாது தண்டித்தால் மட்டும் போதுமா? கூறுவாயாக!

மனிதன் வினைகளைத் தூக்கிகொண்டு சுமக்கிறான். தனக்கு துன்பம் வரும்போது மட்டும் யாரை நொந்து கொள்வது என்று வேதனைப்படுகின்றார் மாணிக்கவாசகர்.

வினைகளை போக்கிவிட்டால் யாரையும் நொந்து கொள்ள வேண்டியதில்லை என்பது வேதாத்திரியம்.

மாணிக்கவாசகர் கேட்ட மேலான விளக்கத்தை வேதாத்திரியம் தருகிறது. (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

“வினைஎதுவும் நலம் தீது என்பது இல்லை
விளைவும் அதனை ஆற்றுபவர் நோக்கம் கொண்டே
வினையதனை நலம்தீது எனப் பிரிப்போம்.
விழிப்புடனே எண்ணம் எழும்போதே தேர்வோம்.
வினை, காலம், இடம், தொடர்புப் பொருளுக்கு ஏற்ப
வெவ்வேறு அளவு இன்ப துன்பம் நல்கும்.
வினைகள் தமை உடல்தகுதி, உலகம் ஒப்ப,
உயர்இயற்கை நியதி ஒக்க ஆற்றமேலாம்.” (ஞாக.பா.1285)

இயற்கை என்ற பேராற்றலானது,, பல நீண்ட காலமாக, மிகவும் நுட்பமாகத் தனது வயிற்றில் வைத்து. மனித உடலை பல லட்சம் தலைமுறைகளாக வடிவமைத்து அளித்துள்ளது.

அகக் கருவிகள் ஐந்து, செயல்கருவிகள் ஐந்து ஆகிய பத்துக் கருவிகள் மூலம் உடல் இயங்குகின்றது.

தேவைக்கேற்ற மலர்ச்சி, சூழ்நிலைக்கேற்ற மாற்றம் என்ற வகையில் இயற்கையின் தன்மாற்றத்தால் உடல் கிடைத்துள்ளது என்ற உண்மையைத் தன் முனைப்பின் காரணமாக மனிதன் மறந்து விடுகிறான்.

அந்த பேராற்றலுடைய இயற்கையே தன்னுள் இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது என்ற உண்மைகளையும் மறந்து விடுகிறான்.

புலன்களின் துய்ப்பில் இன்பம் இருப்பதாகக் கருதி மயக்க நிலையில் மேலும் மேலும் இன்பம் வேண்டி எந்த உறுப்பைப் பயன்படுத்தி துய்த்துக் கெடுத்தாலும், மனிதனுக்குள் இருக்கிற இயற்கை அவனுக்குப் பாடம் கற்றுத் தருவதற்காக, அந்த உறுப்பின் அணு அடுக்குகளை சீர்குலைத்து துன்பத்தை ஏற்படுத்தி நோய் என்ற விளைவையும் கொடுக்கிறது என்ற உண்மைகளை அறிவோமாக.

செயலுக்குத் தக்க விளைவு என்பதே இறைநீதியாகும். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

> "வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை
> வேண்டுவது இன்றியமை யாததாகும்.
> வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,
> விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
> வினைத்தூய்மை வித்தான மனத்தின் தூய்மை
> விண்ணுணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய.
> வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று
> உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1286)

வினை என்பது கர்மா அல்லது செயல் ஆகும். செயல்களில் நன்மையானது தீமையானது என்பது எல்லாம் இல்லை.

செயலின் மூலமாக ஏற்படும் விளைவு செயலாற்றுபவரின் நோக்கம் ஆகியவற்றைக் கொண்டே, நன்மையானது அல்லது தீமையானது என்று பிரித்துக் கூறுகிறோம்.

எண்ணம்தான் செயலாக மலர்ச்சி பெறுகிறது. செயலுக்கு முன் நிலையாகிய எண்ணம் எழும் போதே விளைவைத் தெரிந்து விழிப்புடன் செயல்படுவோம்.

செயல், செயலுக்குரிய காலம், செயலுக்குரிய இடம், செயலால் தொடர்பு கொள்ளும் பொருள் ஆகியவற்றிற்கு ஏற்றபடி வெவ்வேறு அளவுகளில் இன்பம் துன்பம் வெளிப்படும்.

உடல் ஆற்றலின் தகுதியோடு, உலக மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், இயற்கை நியதிக்கு உட்பட்டு செயல்களைச் செய்தால் அச்செயல்கள் எல்லாம் உயர்வானவையாகும். சரி.

வினைப் பதிவுகளை கழிப்பது எப்படி? விடையாக மீண்டும் வருகிறது வேதாத்திரியம் ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.

"தவமுறையும் அறநெறியும் பற்றப் பற்றத் தருக்கென்ற
தருக்கென்ற தன்முனைப்புக் குன்றிப் போகும்.
பவவினைகள் புதிது எழா. முன்னம் செய்த
பதிவுகளும் மறைந்து மெய்ப்பொருள் காணும்.
சிவநிலையை சீவனிலே உணர்ந்து கொண்டால்,
சிறுமைதரும் மனமயக்க மாயை ஏது?
எவரெனினும் இவ்வழியால் அன்றி உய்ய
ஏதுவழி வேறுலகில்? எண்ணிப் பாரீர்!" (ஞாக.பா.1578)

தவத்தையும் அறநெறியையும் பற்றி வாழ்ந்தால் வினைப்பதிவுகளை போக்கிவிடலாம்.

"வினைபோகமே தேகம் கண்டாய்" என்பதை உணர்ந்து, நாமும் தவத்தையும் அறநெறியையும் இருகண்களாகப் போற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

# 3.குற்றமும் குணமும் மனித இயல்பு

மனிதர்களாகப் பிறந்தவர்கள் தர்மப்படி வாழ்வு நடந்த வேண்டுமானால், சகல காரியங்களிலும் விதிப்படி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த விதிமுறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ரொம்பவும் அவசியம்.

ஆனால் அவற்றை அவர்களாக ஏற்று, சுயேச் சையா கப பின்பற்றுவதே அழகு. ஒருவரை நிர்பந்தப்படுத்தி விதிகளை அநுச ரிக்கச் செய்வதில் பெருமை இல்லை.

'சம்பிரதாயம்' என்பது தானாக வழிவழியாக வந்திருக்கிறது. மக்கள் அதைத் தாமாக ஏற்றுப் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

சம்பிரதாயத்தில் வந்துள்ள அத்தனை விதிமுறைகளையும் சாஸ்திரத்தில் சட்டம்போல் எழுதி வைக்கவில்லை.

சட்டம் என்று எழுதிவிட்டால் அது நிர்பந்தமாகிவிடுகிறது என்பதே காரணம். 'ஸஹஸ்ரம் வத; ஏகம் மா லிக' (ஆயிரம் விஷயங்களை வாயால் எடுத்துச் சொல்லு; ஆனால் ஒன்றைக்கூட எழுத்திலே எழுதி வைத்துக் கட்டாயப்படுத்தாதே) என்பது ஆன்றோர் வாக்கு.

ஆனால் இப்போது 'இதைச் செய், அதைச் செய்' என்று எதற்கெடுத்தாலும், எங்கே பார்த்தாலும் நோட்டீஸ் போடுவதும், எழுதி வைப்பதுமாக இருக்கிறது.

நான் பூஜை செய்கிற இடத்திலேயே 'பேசாதே, சட்டை போட்டுக் கொள்ளாதே' என்றெல்லாம் எழுதி வைக்கிறீர்கள். இனிமேலே இப்படிச் செய்ய வேண்டாம்.

நான் இப்படி விதி மாதிரி உங்களைக் கண்டித்து, நிர்பந்தப்படுத்திச் சொல்லும்போது, நானே இதுவரை சொன்ன நல்ல விதியை மீறுகிறேன்.

'செய்ய வேண்டாம்' என்கிற போதே நிர்பந்தமாகச் சட்டமாக்கி விடுகிறேன். அது தப்புதான். 'இப்படியெல்லாம் எழுதலாமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்' என்று நான் சொல்லியிருந்தால் அதுதான் முறை.

தேய்ந்து போன சந்திரனுக்கு மரியாதை

'ஒருவரிடம் எத்தனை தோஷம் இருந்தாலும் அதைப் பெரிதுபடுத்தாதே. சிறிது குண விசேஷம் இருந்தாலும் அதையே கொண்டாட வேண்டும்' என்பது பெரியோர் உபதேசம்.



பிறரது குறைகளை வெளிப்படுத்தக் கூடாது; அவர்களிடம் உள்ள நல்ல அம்சங்களையே வெளிப்படுத்த வேண்டும்.

தேய்ந்துபோன சந்திர கலைக்கும்கூடக் குளுமையும் பிரகாசமும் இருப்பதால் அதைப் பரமசிவன் தம் தலையில் தரித்து உலகமெல்லாம் பார்த்துப் புகழும்படி செய்கிறார்.

அதே ஈசுவரன் மகா கொடிய ஆலகால விஷத்தை யார் கண்ணிலும் தெரியாமல் தம் கண்டத்தில் ஒளித்து வைத்திருக்கிறார். இவ்வாறு தண்டி என்ற கவி கூறுகிறார்.

ஆனால் தோஷம் பார்க்கிறதும், அதைப் பெரிதுபடுத்திப் பேசுவதும் எழுதுவதுமே பொதுவில் தற்காலத்தில் மிக அதிகமாகியிருக்கிறது. அதிலும் நிறையப் படித்தவர்கள் நிறையக் குற்றம் காண்பார்கள்.

"குற்றம் கண்டுபிடிப்பதுதான் அறிவாளியின் காரியம். 'வித்வான்' என்றாலே 'தோஷக்ஞன்' என்று லட்சணம் சொல்லியிருக்கிறது" என்று இவர்கள் வாதம் செய்யலாம்.

'தோஷக்ஞன்' என்றால் குற்றம் அறிந்தவன் என்றே அர்த்தம். குற்றத்தைப் பெரிதுபடுத்திப் பிரசாரம் செய்பவன் என்றல்ல. குற்றம் குறைகளை உணர வேண்டும். உணர்ந்து அவற்றை நாம் தவிர்க்க வேண்டும்.

குற்றம் உள்ளவர்களுக்கும் இதை இதமாக எடுத்துச் சொல்லலாம். ஆனால் ஓயாமல் தோஷம் பாராட்டிக் கொண்டும் அதைப் பிரசாரம் பண்ணிக்கொண்டும் இருக்கக் கூடாது.

உபதேசிப்பதற்கு முன்னர்

தோஷமுள்ளவரிடம் அதை எடுத்துக் காட்ட வேண்டுமானால் நமக்குப் பூரண யோக்கியதை இருக்க வேண்டும். நம்மிடமே ஏராளமான தோஷங்களை வைத்துக் கொண்டு இன்னொருத்தருக்கு உபதேசம் செய்தால், அது பிரயோஜனப்படாது.

சில சமயங்களில் நாம் சொல்வதாலேயே அவர்கள் முன்னைவிட வீம்பாகத் தங்கள் தவற்றை வெளிப்படச் செய்யவும் தொடங்கலாம்.

'நமக்கு யோக்கியதை இருக்கிறது. ஸ்தானம் இருக்கிறது. நம் வார்த்தை எடுபடும்' என்று நிச்சயமானாலே பிறருக்கு உபதேசிக்கலாம்.

ஒருவரது நல்ல அம்சத்தைக் கொண்டாடுவதால் அவருக்கு மேலும் உற்சாகம் உண்டாகிறது. இந்தக் குணங்களை விருத்தி செய்து கொள்கிறார்.

ஆனாலும் ஒருவரைப் புகழுவதிலும் நமக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஒரேயடியாக ஸ்தோத்திரம் செய்து, ஒருவரை அகங்காரத்திற்கு ஆளாக்கி விடக்கூடாது.

புகழ்ச்சி ஒரு நுட்பமான விஷயம். இதனால்தான் பெரியோர்கள், "ஈசுவரனையும் குருவையும் மட்டுமே நேரில் துதிக்கலாம்; பந்து மித்திரர்களை நேரில் புகழாமல் மற்றவர்களிடமே போற்றிப் பேச வேண்டும்; (சவாரி முடிந்த பின் குதிரையைத் தட்டிக் கொடுப்பது போல்) வேலையை முடித்த பின்னரே ஊழியரைப் பாராட்டலாம்; பிள்ளையை ஒரு போதும் புகழக் கூடாது" என்றார்கள்.

இப்போது, நான் உங்கள் மேல் குற்றப் பத்திரிகை படித்ததற்கும் சமாதானம் சொன்ன மாதிரி ஆகிவிட்டது. தன் சொந்தக் குழந்தைகளை ஒரு போதும் ஸ்தோத்திரம் பண்ணக் கூடாது.

அவர்களை இடித்தும் காட்டலாம் என்று சாஸ்திரமே சொன்னதால், நான் உங்களைத் தோஷம் சொன்னதிலும் தோஷமில்லைதான்.
(தெய்வத்தின் குரல் (முதல் பகுதி)

மலை போன்ற குற்றங்களையும் குணமாக நீ எடுத்துக் கொண்டால், என கெட்டு விடப் போகிறது? மனம் இரங்குவாயாக!” என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

ஒன்றும் போதா நாயேனை
  உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
  ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
  குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்டது இரங்கிடாய்
  எண்தோள் முக்கண் எம்மானே. (திருவா.பா.498)

உமையொரு பாகனே! எம் அரசே! எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய எம் தந்தையே!

ஒன்றுக்கும் பெறாத நாயேனை உய்யுமாறு ஆட்கொண்ட திருவருள் இப்பொழுது இல்லாமல் போய்விட்டதா?

மாணிக்கவாசகரின் வேண்டுகோளுக்கு விடை தருகிறது வேதாத்திரியம். நாம் நமது கருமையத்தை களங்கப்படுத்தாமல் தூய்மை செய்து கொண்டால் குற்றமில்லா குணங்களுடன் வாழலாம்.

“நிறைவு பெறாமல் இருக்கும் ஆசைகளின் கூட்டம்,
  நெஞ்சம் மனம் பேச்சுஇடை பிணக்காகும் பொய்கள்,
மறைமுகமாய் நேர்முகமாய் பிறர்உளம் வருத்தல்,
  மற்ற உயிர் ச தந்திரமும் வாழ்வின்வளம் பறித்தல்,
நிறைவழிக்கும் பொறாமை சினம்வஞ்சம் காத்தல், மேலும்
  நெறிபிறழ்ந்த உணவு உழைப்பு உறக்கம் உடலுறவு
கறைபடுத்தும் எண்ணம் இவை கருமையம் தன்னைக்
  களங்கப்படுத்திவிடும். கருத்தொடு சீர் செய்வோம்.” (ஞாக.பா.1805)

கருமையத்தில் அமைந்துள்ள பதிவுகளுக்கேற்பவே எண்ணம், சொல், செயல்கள் வெளிப்படுகின்றன.

கருமையமே அவரவர் ஆற்றும் செயல்களுக்கேற்ப விளைவுகளை நல்குகிறது. எனவே. கருமையத்தைத் தெய்விக நீதிமன்றம் என்று சொல்லுகிறோம்.

எண்ணம், சொல், செயல்களின் தூய்மைக்கேற்பவும். களங்கத்திற்கேற்பவும் கருமையமும் தூய்மையையோ, களங்கத்தையே அடைகிறது.

# 4.அறியாமையை அகற்றலாமா?

நான் என்ற எண்ணம் காலம், இடம் சம்பந்தமான கருத்துகளைக் கொண்டு வருகிறது. மனம் என்னும் மரத்தின் விதையாக இருப்பது இந்த 'நான்' என்ற எண்ணம்.

இந்த அகங்காரம் என்னும் விதையிலிருந்து முதலில் முளைவிடுவது புத்தி ஆகும்.

இந்த முளையிலிருந்து எண்ணங்கள் என்ற கிளைகள் உதிக்கின்றன. மனத்தின் மரக்கிளைகளை தினசரி வெட்டி எரியுங்கள்.

காலப்போக்கில் மரத்தையும் அதன் வேரையும் முற்றிலுமாக அழித்துவிட வேண்டும்.

ஒழுக்கம், நீதிநெறி, நற்குணம், தன்னலமற்ற தொண்டு ஆகிய பண்புகளைப் பெற முயற்சி செய்வது அகந்தையை அழிக்கத்தான்.

'நான்', 'எனது' என்பது அறியாமை. 'நாம்,' 'நம்முடையது' என்பது அறிவுடைமை. நாம் பூரண நிலையை அடைய விரும்பினால் அகந்தையை முழுமையாக அகற்றி விடுவோம்.

"அடியேனுடைய அறியாமையை அறிந்து கொண்டு, நீயே வந்து அருள் செய்து, என்னைக் கூவி அழைத்துக் கொள்ளும் நாள், எந்த நாள் என்று உன்னிடமே கேட்குமாறும் செய்து விட்டாய்." என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

மானேர் நோக்கி மணவாளா
  மன்னே நின்சீர் மறப்பித்து இவ்
ஊனே புகஎன் தனைநூக்கி
  உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
  அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
  என்றுஎன்று உன்னைக் கூறுவதே. (திருவா.பா.499)

மான் போன்ற பார்வையினை உடைய உமையாளின் கணவனே! எம் அரசே!

உன்னுடைய பெருமையை மறக்குமாறு செய்து, இந்த ஊன் உடம்பில் என்னைத் தள்ளி, துன்புறுமாறு செய்து விட்டாய்.

அடியேனுடைய அறியாமையை அறிந்து கொண்டு, நீயே வந்து அருள் செய்து, என்னைக் கூவி அழைத்துக் கொள்ளும் நாள், எந்த நாள் என்று உன்னிடமே கேட்குமாறும் செய்து விட்டாய்." என்பது இப்பாடலின் பொருளாகும்..

ஓர்மை நிலைப் பயிற்சியை பழக்கப்படுத்தி வழக்கப்படுத்திக் கொண்டால் நிறை நிலை தானாக வந்து விடும். மேலான நிலையை எப்போதும் பற்றி நிற்கலாம்.

இறைநிலையே கூவி அழைத்து கொள்ளும் நாளாக எல்லா நாளும் அமைந்துவிடும். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"இறைநிலையொடு எண்ணத்தைக் கலக்க விட்டு,
ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க,
நிறைநிலையே தானாக உணர்வ தாகும்.
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கு மட்டும்,
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக் கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்.
கறைநீ ங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்.
கரைந்துபோம் தன்முனைப்பு. காணும் தெய்வம்." (ஞாக.பா.1487)

இறைநிலை இல்லாத இடமோ, பொருளோ, இயக்கமோ, விளைவோ இல்லை.

இடமாக இருப்பதும் சுத்தவெளி. பொருளாக இருப்பதும் சுத்தவெளி, இயக்கமாக இருப்பதும் சுத்தவெளி. விளைவாக இருப்பதும் சுத்தவெளி.

அந்த சுத்தவெளியைத்தான் இறைநிலை என்கிறோம். மனிதன், "தான்" என்று உடலை எல்லை கட்டிய மனதை அறிவு என்ற நிலைக்குக் கொண்டுவந்து. அறிவை விரித்து, உயர்த்தி சுத்தவெளியில் கலப்புற வேண்டும்.

அந்த நிலையில் அறிவானது விழிப்பாக இருக்கும். சுத்தவெளி என்ற இறைநிலையே தன்மாற்றமடைந்த எல்லாமாக இருப்பதையும், எல்லாவற்றிலும் தன்னையும், தன்னிலே எல்லாவற்றையும் காண்கின்ற நிலை அறிவிற்கு அனுபவமாகும்.

உறக்கமும் விழிப்பும் அற்ற அந்த நிலையை, உயிரானது உடலில் இயங்குகின்றவரை, தினசரி அனுபவமாக்க வேண்டும்.

சிற்றறிவை பேரறிவோடு இணைத்து, உறைந்து உறைந்து சுத்தவெளியாகவே மாறி விடுகிறபோது,

நில உலக வாழ்க்கையின் இன்பங்களில் அளவுகிட்டி, தன்னிறைவு உண்டாகும்.

ஆன்மக் களங்கங்களாகிய கறைகள் நீங்கி அறிவானது உண்மைப் பொருளாகவே உணரப் பெறுவதால், தன்முனைப்பு கரைந்து இறை முனைப்பாகிய தெய்வநிலை உணரப்பெறும். இந்நிலையே முழுமைப்பேறு என்னும் நிறைபேற்று நிலையாகும்.

இந்த நிலையை அறிவதற்கும் அடைவதற்குமே எடுத்ததுதான் மனிதப்பிறப்பு ஆகும்.

## 5.அனைத்துமே சுத்தவெளிதான்!

புத்தம் என்றால் உருவத்தையோ, மதத்தையோ குறிப்பது அல்ல
புத்தம் என்றால் “தெளிந்த புத்தி”

அதுபோலவே கிருஷ்ணம் என்பதும்
விநாயகர் என்பதும்,
முருகன் என்பதும்,
பராசக்தி என்பதும்
இன்னும் உள்ள அனைத்து உருவ கோட்பாடுகளும்
உருவத்தையோ, மததைத்தையோ குறிப்பது அல்ல

ஆதியுமாகி,
அந்தமுமாகி,
ஆனைத்துமும் ஆகி,
அந்த அனைத்திற்கும் அடித்தளமாக இருக்கும் சுத்தவெளி

தத்துவத்தை உணர்ந்து தெளிவது தான்
ஒரு சாரார் கடவுள் ரூபத்தில் இருப்பதாகவும்
மற்றொருசாரார் கடவுள் அரூபமானது என்றும்
இன்னும் சிலர் எங்கும் வியாபித்திருப்பவர் என்றும்
வேறு சிலரோ பரம பிதா என்றும்
பிறிதொரு சிலர் (அல்லாஹ்) நிகரற்றவர் என்றும்
மேலும் சிலர் கடவுள் ஒளி வடிவானர் என்றும்
உணர்ந்தோர் சிலர் சூன்யம் என்றும்

பலப்பல கருத்துக்களை பகிர்ந்து
மனிதகுலத்திற்கு எப்படியாவது கடவுள்தத்துவத்தை புரிய வைக்க
வேண்டும் என்று எண்ணி முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

எல்லாம் உண்மையே என்றபோதும்........
கடவுள் என்பதும், உண்மை என்பதும் ஒன்றாக மட்டும் இருப்பதால்
அந்த ஒன்று எது என்று ஆராயும் போது கிடைத்த விளக்கம் தான்
சுத்தவெளி என்னும் சூன்ய தத்துவம்.

சுத்தவெளி என்பது தன்னகத்தே அனைத்தையும் இருப்பில்
வைத்துக்கொண்டு இருப்பதால்
அது கருமை நிறமாக காட்சி ஆகிறது
அந்த கருமை நிறமே கிருஷ்ணம்
கிருஷ்ணம் என்றால் அது கருமை நிறத்தையே குறிக்கும் சொல்.

விநாயகர் என்றால் அது முதல் நிலையைக் குறிக்கும் சொல்
எந்தவொன்று தோன்றினாலும்,
அந்த தோற்றத்தின் மூலக்கூறு ஏதோ ஒன்றாகத்தானே
இருக்கமுடியும்!

அந்த மூலக்கூறு தான் சுத்தவெளி
அந்த சுத்தவெளி தான் பூரணம்,
அது தான் முழுமை,
ஆதி, அந்தம் அனைத்தும்.

இந்த தத்துவத்தை உணர்துவதற்கே ஒவ்வொருவரும்
அந்த காலம் தொட்டு இந்தக் காலம் வரை புரிய வைக்க
முயல்கிறார்கள்.

அதை நினைவு கூறும் வகையில் தான் ஒவ்வொரு புராணங்களையும்,
சம்பவங்களையும் உண்டுபண்ணி
ஒவ்வொரு ஆண்டும் விழாவாக கொண்டாடி
நமக்குள் இருக்கும் இறைத் தன்மையை உணர வேண்டும் என்று
உருவாக்கினார்கள்.

நாமும் ஒவ்வொரு ஆண்டும் விழாவை மட்டும் கொண்டாடிக் கொண்டும்,
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டும்
காலத்தை மட்டுமே கடந்து கொண்டிருக்கிறோம்.

விழாவின் விவேகத்தை உணராமலே
ஒவ்வொருகுள்ளும் இருக்கும் சிவமும், விநாயகமும், கிருஷ்ணமும், புத்தமும், பரமபிதாவும், நிகரற்றதுமான இறைசக்தி மலர்ந்து மகத்துவத்தை உணரும் நன்னாள் இந்நாள் மட்டுமல்ல எந்நாளும் மலர்ந்து மகிழட்டும்.

சுத்தவெளியின் இருப்பை நமக்குள் உணர்வதே அனைத்து விழாக்களும்.

நன்மை தீமை எல்லாமும் நீயே!” என்று மாணிக்கவாசகரும் அனைத்தும் சுத்தவெளியே என்று இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

கூறும் நாவே முதலாகக்
  கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
  தீமைநன்மை முழுதும்நீ
வேறோர் பரிசு இங்கு ஒன்றில்லை
  மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
  திகைத்தால் தேற்ற வேண்டாவோ. (திருவாச.பா.500)

- சிவபோக நாதனே! உனது உண்மைத் தன்மையை விரித்துப் பேசுவதாக இருந்தால், பேச உதவும் நான்கு முதல் எல்லாக் கருவிகளாக இருப்பவனும் நீயே!

- திகைப்பு உண்டாக்குபவனும் நீயே! நன்மை தீமை எல்லாமும் நீயே!

உனக்கு வேறாக வேறொரு தன்மையும் இங்கு இல்லை. நான் திகைத்து நிற்கும்போது. தேறும் வழியை எடுத்துக் கூறி, என்னைத் தேற்ற வேண்டாமா?” என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

திசை தெரியாது தவிக்கும் மானுடத்திற்கு பாதையை திசையைக் காட்டுகிறது வேதாத்திரியம்.

## திசை காட்டும் வேதாத்திரியம்

வேதாத்திரியம்  ஒரு படைப்பிலக்கியமாகவோ- பக்தி இலக்கியமாகவோ -கருத்தை திணிக்கும் கசாய இலக்கியமாகவோ இல்லாமல்- ஒரு பட்டறிவு இலக்கியமாக இருக்கிறது.

வேதாத்திரியம்- ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. ஓர் உயர்ந்த நாகரிகத்தின் -ஒட்டுமொத்த தெளிவின் திரள்.

வேதாத்திரியம்- ஒரு படைப்பு முயற்சி அல்ல. பரிணாம வளர்ச்சி. மிக உயர்ந்த மீமிசையே -பூமிக்கு குடையாக முடியும். மிக உயர்ந்த உன்னதமே -உலகுக்கு கொடையாக முடியும்.

வேதாத்திரியத்தை -நாம் எதற்காக இன்றும் கொண்டாடுகிறோம். காரணம் -வேதாத்திரியம் இன்றும் தேவைப்படுகிறது.

தலைகுனியச் செய்யும்- தலைப்புச் செய்திகள். தினந்தோறும் வானிலை அறிக்கை போல வாசிக்கப்படுகிற வக்கிரங்கள். சிறைவாசலில் நின்று சிரித்து கையசைக்கும் -சில்லரை மற்றும் தேசிய கயவர்கள்.

குற்றங்களை விடவும் -கொடுமையாய் வலிக்கிறது. குற்ற உணர்வு - முற்றிலும் அற்றுப்போன அவலநிலை. சுற்றும் உலகம் சுருங்கிவிட்டது.

ஆனால் -வீடும் வீதியும் விலகிச் செல்கிறது.பலவகையிலும் குழம்பிக் கிடக்கிறது -வாழ்க்கை.

இருந்தாலும் குழைத்துப் போட- ஒரு மருந்து கையில் இருக்கிறது. இப்போதும் -இது நாட்டு மருந்து.

இந்த நாட்டு மருந்து எத்தனை ஆண்டுகாலம் ஆன பின்னாலும் - காலாவதி ஆகாத கைமருந்து.

இது மருந்தாகித்- தப்பா மரம் இல்லை. மானிடம் நிலைக்க -இந்த மண்ணில் என்றோ -முளைத்து இன்னும் தழைக்கும் அறம்.

திசைகாட்டும் கருவி -திசைகளின் தேர்வு தெளிவாய் இருந்தால் வழிகள் பிறக்கும்; வாசல்கள் திறக்கும். வழிகாட்டிகள் உடன் வருபவர்கள் -அவர்கள் யோசிக்க விடுவதில்லை.

ஆனால்- திசைகாட்டும் கருவி தீர்க்கமானது. தெற்கு -வடக்கை தெரிவிக்கும். தேர்ந்தெடுக்கவேண்டியது -நாம் தான். திசை என்பது திக்கு.

வேதாத்திரியம் காட்டும் திசை -தெளிவானது. தீர்க்கமானது.அறத்தின் திசையாகவும்- வேதாத்திரியம் உள்ளது.

அறம் நோக்கமாகவும், பயன்பாடாகவும், வழிமுறையாகவும் இருக்கிறது. அறநோக்கம், அறவழி, அறப்பயன். அதுவே அறத்தை பொருளை, இன்பத்தை வழி நடத்துகிறது.

பிறர்க்கோ-தனக்கோ-தற்காலத்திலோ-பிற்காலத்திலே அறிவிற்கோ- உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும்- முறையோடும்- வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையயும்- தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைக் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் -இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.

வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் -வேதாத்திரியம் தெளிவுபடுத்துகிறது.

மகரிஷியின் அறம், சமயம் சாராத அறம். இடம், காலம், வலிமை சார்ந்த நடைமுறை அறம். மனித வளத்தில் -முதலீடு செய்யும் முதல் அறநூல்.

வேதாத்திரியம் காட்டும்- அடிப்படைத் திசை- அறம். அந்த அடிப்படைக்கு அடிப்படையாய் -அடையாளம் பெறுவது மனச்சான்று.

அச்சம் சார்ந்த அறம் -அறமல்ல. பயன், புகழ் நோக்கும் அறம் உண்மையில் அறம் அல்ல. மனநலம் காக்க மருந்தொன்று உண்டு என்றால்- அது தினம் ஒரு வேதாத்திரியம் படித்து உணர்வது தான்.

## 6. செயலுக்குத்தக்கபடி தான் இறைவன் கொடுப்பான்

ஒரு தடவை முல்லா கப்பல் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

கப்பல் திசைமாறி தாறுமாறாக அலையத் தொடங்கியது. கரையே பல நாட்கள் கண்களில் தென்படவே இல்லை.

உணவும் குடிநீரும் முற்றிலும் தீர்ந்து விட்டன.

கப்பலின் பயணம் செய்தவர்களுக்குத் தாங்கள் உயிர்பிழைக்க மாட்டோம் என்ற அச்சம் ஏற்பட்டு விட்டது.

அதனால் பிரயாணிகள் அனைவரும் தரையில் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர்.

தான் உயிர் பிழைத்தால் தன்னுடைய வீடு வாசல்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்குத் தருமம் செய்து விடுவதாக ஒருவர் சொன்னார்.

மற்றொரு பிரயாணி தாம் உயிர் பிழைத்தால் ஆயிரம் ஏழை

மக்களுக்கு நாள் தவறாமல் உணவளிப்பதாக வாக்குறுதி கொடுத்தார்.

இவ்வாறு ஒவ்வொரு பிரயாணியும் தம்மிடமிருக்   கம் விலை மதிப்புள்ள பொருட்களையெல்லாம் தானம் செய்து விடுவதாக வாக்குறுதிகள் தந்தனர்.

இந்தக் காட்சிகளை யெல்லாம் ஒருபக்கமாக நின்றவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருருந்தார் முல்லா.

திடீரென்று அவர் அதோ கரை தெரிகிறது நாமெல்லாம் உயிர் பிழைத்து விட்டோம் என்று கூவினார்.

பிரயாணிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் சேர்ந்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

முல்லா உடனே உரத்த குரலில் அன்பர்களே நமக்கு உயிர்ப்பிச்சை அளித்த கடவுளுக்கு நன்றி செலுத்தம் வித்   தத்தில் நாம் எல்லோரும் சேர்ந்து பிரார்த்தனை செய்வோம் என்றார்.

அவர் பேச்சுக்கு யாரும் செவிசாய்க்கவே இல்லை. உயிர்பிழைப்பது உறுதியாகி விட்டதால் இனி கடவுளின் தயவு தங்களுக்குத் தேவையில்லை என்று அவர்கள் கருதினார்கள்.

சற்றுமுன் அவர்கள் செய்த வாக்குறுதிகளையெல்லாம் மறந்து விட்டார்கள்.

அந்த நேரத்தில் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு கடவுளுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டோம். ஓரேயடியாக சொத்து சுகங்களைத் தியாகம் செய்துவிட முடியுமா? என்றெல்லாம் பேசத் தலைப்பட்டார்கள்.

முல்லா அட்டகாசமாக் கலகலவென நகைத்தார்.

“ஏன் சிரிக்கிறீர்?” என்று பிரயாணிகள் வினவினார்கள்.

“கரை கண்களுக்குத் தெரிவதாக நான் சொன்னது உண்மையல்ல ஒரு விளையாட்டுக்காக அவ்வாறு சொன்னேன் “ என்றார் முல்லா.

பிரயாணிகள் நாலாபுறமும் கடலில் கண்களை ஒட்டினர். முல்லா சொன்னது உண்மைதான் கரை எந்தப் பக்கமும் கண்களுக்குத் தெரியவே இல்லை.

உடனே பிரயாணிகள் அனைவரும் அழுகுரல் எழுப்பியவாறு கடவுளைப் பிரார்த்தனை செய்வதற்காக மண்டியிட்டு அமர்ந்தனர்.

இங்கு மாணிக்கவாசகரின் பிரார்த்தனை வித்தியாசமாக இருக்கிறது.

வேண்டத்தக்கது அறிவோய் நீ
  வேண்டமுழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
  வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
  யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
  அதுவும் உன்றன் விருப்பன்றே. (6) (திருவா.பா.501)

- யான் வேண்டத் தகுதி உடையது எது என்பதை அறிந்தவன் நீ!யான் வேண்டிய அனைத்தையும் தருபவனும் நீ.
- வேண்டும் என்ற விருப்பம் கொண்ட பிரம்மனுக்கும் திருமாலுக்கும் அரியவன் நீ!
- விரும்பி என்னை ஏவல் கொண்டாய்.

எனது விருப்பமும்  அதுவாகவே இருந்தது. மேலும் அடியேன் ஏதேனும் விரும்பினால் அதுவும் உன்னுடைய விருப்பமே.

வேண்டத்தக்கது அறிவோய் நீ

வேண்ட முழுதும் தருவோய் நீ”

என்ற திருவாசகம் மனதுக்கு நெருக்கமாக இருக்கிறதே. சடங்குகளிடம் இருந்து வந்து சேரும் இடமா இந்த திருவாசக வரிகள்?

கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?

கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே!

கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே!

என்ற சித்தர் பாடலில் உள்ள defiance (maybe seeming defiance) சொல்ல வருவது என்ன?

வேண்டதக்கது அறியோய் நீ ! வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன்மாற்கு அறியோய் நீ!

வேண்டி என்னைப் பணி கொண்டாய்!
வேண்டி நீ யாது அருள்செய்தாய்

யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,

அதுவும் உந்தன் விருப்பன்றே!

**திருவாசகம்-குழைத்த பத்தில்**, உள்ள இப்பாடல், உண்மையான பக்தியுடையோர், இறைவன், எதைத் தந்தாலும், அதை விருப்பத்தோடு, ஏற்றுக்கொள்ளும் தெளிவான மன நிலையைக்கொண்டிருப்பர் என்பதை தெளிவுபடுத்துகிறது

உண்மை பக்தி, இறைவன், சொல்லின்படி நடப்பது. இறைவன், நாம், வேண்டும்,எதையும், முழுதாய், தரும், கருணை வடிவானவர்.

ஆதலால், வேண்டத்தகாதவற்றை வேண்டினாலும், தருபவர். ஆனால், இறைவனிடத்தில், உண்மை அடியவர், இறைவன், தரும், **எதையும், ஏற்றுக்கொள்வர்**.

இறைவன், மாணிக்க வாசகருக்கும், மற்ற நாயன்மாருக்கும், துன்பம், தந்த போதும், அவர்கள், பக்தி நிலையில் இருந்து மாறவில்லை.

'இடரினும் தளரினும், எனதுறு நோய் தொடரினும், உனகழல், தொழுதெழுவேன்'- சம்பந்தரின் பதிகம், ஒப்பு நோக்கத் தக்கது.

செயலுக்குத்தக்கபடி தான் இறைவன் கொடுப்பான் மகரிசி

எந்தத் தேவையுமற்ற இறைவனிடம் நமது தேவைகளை முறையிடுவது தான் பிரார்த்தனை என்ற அடிப்படையைக் கூட அதிகமான மக்கள் விளங்காமல் உள்ளனர்.

தாங்களாகவே செய்து கொண்ட கற்சிலைகளிடமும், இறந்து விட்ட பெரியார்களின் சமாதிகளிலும் போய் பிரார்த்திக்கின்றனர்.

இதற்குக் காரணம், இறைவனின் பண்புகளைப் பற்றியும், அவனது வல்லமை பற்றியும் அறியாமல் இருப்பது தான்.

எனவே இறைவனின் பண்புகளை எடுத்துக் காட்டி, அவனிடம் மட்டுமே பிரார்த்திக்க வேண்டும் என்பதை விளக்குவதுடன், இறைவனிடம் நமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் அதற்கான நிபந்தனைகள் என்ன? அதற்கு இடைத்தரகர்கள் தேவையா?

## 7. நன்றும் பிழையும் நீயே செய்வாய்!

கடமை தவறாத முதலமைச்சரான மணிவாசகர், இறைவன் ஆட்கொண்ட பின் கடமை தவறியதற்கு இறைவனே பொறுப்பு!

இதை இறைவனும் அறிவான்; இத் திருவிளையாடலை மணிவாசகரின் ஒரு அற்புதமான திருவாசகம் நமக்கு அறிவிக்கின்றது.

“குன்றுபோல் என்றும் மாறாத தன்மை கொண்ட இறைவனே! ஆட்கொண்ட அன்றே என் ஆவியையும், உடலையும், உடைமை அனைத்தையும் நீ ஏற்றுக் கொண்டுவிட்டாயே! இன்று எனக்கென ஓர் இடையூறு எப்படி வரும்? எட்டுத் தோள்களும், முக்கண்களும் உடைய எம்மானே! நானே உன் உடைமை என்பதால் என் செயல் என்று எதுவுமில்லை; நன்றே செய்வாய்! பிழை செய்வாய்! அனைத்தும் சிவார்ப்பணம்! நானோ இச்செயல்களின் நாயகன்?” என்றார் மணிவாசகர் உறுதியுடன்.

“எனது உயிரை ஆண்டவனாகிய உனக்கு உரிமை செய்து அளித்தபின் என் உயிர்க்கு உளவாகும் இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் யான் பொறுப்பாளி அல்லன்;

என்னை உடையவனாகிய நீயே அவற்றுக்கு உரியன்’ என்பார், தீமை தன்மை முழுதும் நீ என்றும், நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்றும், ஆயக் கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம், காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் (8) என்றும் அடிகள் இறைவனை நோக்கி முறையிட்டருளிய திறம் இங்கு நினைத்தற்குரியதாகும். இவ்விடத்தில்,

அன்றே என்தன் ஆவியும்
  உடலும் உடைமை எல்லாமும்,
குன்றே அனையாய் என்னைஆட்
  கொண்டபோதே, கொண்டிலையோ,
இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ?
  எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
  நானோ இதற்கு நாயகமே. (7) (திருவாச.பா.502)

மலை போன்றவனே! என்னை ஆட்கொண்டபோதே என்னுடைய உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றியும் நீ ஏற்றுக் கொள் வில்லையா?

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களை யம் உடைய பெருமானே!

இப்பொழுது எனக்கு வரும் துன்பம் உண்டோ? நல்லது செய்தாலும் தவறு செய்தாலும் அதற்கு நானா அதிபதி? (நீயே அன்றோ?)

இறைநிலை அன்பும் கருணையும் உடையது. மாணிக்கவாசகரைப் போல் நாமும் இறைவனிடம் பிராத்திக்கலாம். எப்படி? வேதாத்திரியம் விடையாக வருகிறது.

“அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையுலுள்ளாய்
என் மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே
கன்ம விகைளெல்லாம் கழிந்தன உணர்கின்றேன்
உன்னையறிந்து உய்ய உலகோர்க்குத் தொண்டு செய்வேன்.”
(ஞாக.பா.1651)

**அன்பும் கருணையும்:**

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ, மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

“உளநிலையறிந்து, உயர்ந்த அறிவில்
உதிக்கும் ஆர்வமே, அன்பு.” (மாக்கோலம்)

என்றும்,

“அறிவின் அசையா உறுதியில் சுரக்கும்
விளைவையும் அறியும், அன்பு.” (மாக்கோலம்)

என்றும் அன்பைப் பற்றி வேதாத்திரியம் பதிவு செய்துள்ளது.

ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அணைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு.

முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சட் கருதான் குஞ்சு ஆக உருவாக இருக்கிறது. அந்த மஞ்சட் கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக்கரு தேவையான எல்லாப் பொருட்களையும் அளித்து நலமளிக்கின்றது. இது போன்றது கருணை.

ஒரு மாமரத்தில் பிஞ்சுவிடுகிறது. அதனைச் சிறு காம்பின் மூலம் விழுந்துவிடாமல் மரமானது பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அன்பு.

அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான ரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. அது தான் கருணை.

உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள். இது அன்பு.

அதே காலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவைகளை அது வளர்ச்சி பெறும் வரையில் ஊட்டிக் கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

# 8. ஆண்டவன் போடும் கணக்கு

ஆண்டவன் போடும் கணக்கு அது புரியுமா நமக்கு!

ஒரு புகழ் பெற்ற கோவிலில், பணியாள் ஒருவர் இருந்தார். கோவிலை பெருக்கி சுத்தம் செய்வது தான் அவரது பணி.

அதை குறைவின்றி செவ்வனே செய்து வந்தார். கோவில், தன் வீடு. இரண்டும் தான் அவரது உலகம். இதை தவிர வேறொன்றும் தெரியாது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து இறைவனை தரிசனம் செய்த வண்ணமிருந்தனர்.

‘இறைவன் இப்படி எல்லா நேரமும் நின்றுகொண்டே இருக்கிறாரே அவருக்கு சோர்வாக இருக்காதா?’ என்று எண்ணிய அவர் ஒரு நாள், இறைவனிடம் “எல்லா நேரமும் இப்படி நின்று கொண்டே இருக்கிறாயே… உனக்கு பதிலாக நான் வேண்டுமானால் ஒரு நாள் நிற்கிறேன். நீ சற்று ஓய்வெடுத்துக் கொள்கிறாயா?” என்று கள்ளம் கபடமில்லாமல் கேட்க,

அதற்கு பதிலளித்த இறைவன், “எனக்கு அதில் ஒன்றும் பிரச்னையில்லை. எனக்கு பதிலாக நீ நிற்கலாம். ஆனால் ஒரு முக்கிய நிபந்தனை. நீ என்னைப் போலவே அசையாமல் நிற்கவேண்டும்.

வருபவர்களை பார்த்து புன்முறுவலுடன் ஆசி வழங்கினால் போதும். யார் என்ன சொன்னாலும் கேட்டாலும் நீ பதில் சொல்லக் கூடாது.

நீ ஒரு சாமி விக்ரகம் என்பதை மறந்துவிடக்கூடாது. என் மீது நம்பிக்கை வைத்து அசையாது நின்றாலே போதுமானது” என்று கூற, அதற்கு அந்த பணியாள் ஒப்புக்கொண்டார்.

அடுத்த நாள், இறைவனைப் போலவே அலங்காரம் செய்துகொண்டு, கோவில் கர்ப்பக்ரஹத்தில் இவர் நிற்க, இறைவனோ இவரைப் போல தோற்றத்தை ஏற்று கோவிலைப் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்து வந்தார்.

முதலில், ஒரு மிகப் பெரிய செல்வந்தன் வந்தான். தன் வியாபாரம் சிறப்பாக இருக்கவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்துவிட்டு, ஒரு மிகப் பெரிய தொகையை உண்டியலில் காணிக்கையாக போட்டான்.

செல்லும்போது, தவறுதலாக தனது பணப்பையை அங்கு தவற விட்டுவிடுகிறான்.

இதை கர்ப்பக்ரஹத்தில் இறைவன் வேடத்தில் நின்றுகொண்டிருக்கும் நம் ஆள் பார்க்கிறார்.
ஆனால், இறைவனின் நிபந்தனைப்படி அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை. அப்படியே அசையாது நிற்கிறார்.

சற்று நேரம் கழித்து ஒரு பரம ஏழை அங்கு வந்தான். அவனிடம் உண்டியலில் போட ஒரே ஒரு ரூபாய் மட்டுமே இருந்தது.

“என்னால் இது மட்டும் தான் உனக்கு தர முடிந்தது. என்னை மன்னித்துவிடு இறைவா. என்றும் போல, என்னை காக்கவேண்டும். எனக்கும் என் குடும்பத்தினருக்கும் அடிப்படை தேவைகள் கூட கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

எல்லாவற்றையும் உன்னிடமே விட்டுவிடுகிறேன். நீயாக பார்த்து ஏதாவது எனக்கு ஒரு வழி சொல்” என்று மனமுருக கண்களை மூடி நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்துகொண்டான்.

சில வினாடிகள் கழித்து கண்ணை திறந்தவனுக்கு எதிரே, அந்த செல்வந்தன் தவறவிட்ட பணப்பை கண்ணில் பட்டது. உள்ளே பணத்தை தவிர தங்கக் காசுகளும் சில வைரங்களும் கூட இருந்தன. இறைவன் தனக்கே தன் பிரார்த்தனைக்கு செவிமடுத்து அதை அளித்திருக்கிறான் என்றெண்ணி, அப்பாவித்தனமாக அதை எடுத்துக் கொள்கிறான்.

இறைவன் வேடத்தில் நின்றுகொண்டிருந்த, அந்த சேவகரால் இப்போதும் எதுவும் சொல்ல முடியவில்லை. அதே புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து, ஒரு கப்பல் வியாபாரி வந்தான். ஒரு நீண்ட தூர பயணமாக கப்பலில் அன்று அவன் செல்லவிருப்பதால், இறைவனை தரிசித்து அவர் ஆசி பெற வேண்டி வந்தான். இறைவனிடம் பிரார்த்தனை செய்தான்.

அந்த நேரம் பார்த்து, பணப் பையை தொலைத்த செல்வந்தன், காவலர்களுடன் திரும்ப கோவிலுக்கு வந்தான்.

அங்கு, கப்பல் வியாபாரி பிரார்த்தனை செய்வதை பார்த்து, “இவர் தான் என் பணப்பையை எடுத்திருக்க வேண்டும். இவரை பிடித்து விசாரியுங்கள்” என்று காவலர்களிடம் கூற, காவலர்களும் அந்த கப்பல் வியாபாரியை பிடித்து செல்கிறார்கள்.

“இறைவா என் பணத்தை அபகரித்தவரை அடையாளம் காட்டியமைக்கு நன்றி!” என்று அந்த செல்வந்தன் இறைவனைப் பார்த்து நன்றி கூறிவிட்டு செல்ல,

நம் ஆள் உடனே இறைவனை நினைத்துக் கொள்கிறார். “இது நியாயமா? அப்பாவி ஒருவன் தண்டிக்கப் படலாமா? இனியும் என்னால் சும்மாயிருக்க முடியாது…” என்று கூறி,
“கப்பல் வியாபாரி திருடவில்லை. தவறு அவர் மீது இல்லை!” என்று இறைவன் வேடத்தில் நின்றிருந்த நம் பணியாள் நடந்த உண்மைகளை அனைவரிடமும் சொல்கிறார்.

உடனே, செல்வந்தரும், கப்பல் வியாபாரி இருவரும் நெகிழ்ந்து போய், உண்மையை கூறியமைக்கு இறைவனிடம் நன்றி சொல்லிவிட்டு செல்கின்றனர்.

இரவு வருகிறது. கோவில் நடை சாத்தப்படுகிறது. இறைவன் வருகிறார். மூலஸ்தானத்தில் நின்று கொண்டிருந்த நம் பணியாளிடம் இன்றைய பொழுது எப்படியிருந்தது என்று கேட்கிறார்.
“மிகவும் கடினமாக இருந்தது. உன் வேலை எத்தனை கஷ்டம் என்பதை புரிந்துகொண்டேன். ஆனால் ஒரு நல்ல காரியம் செய்தேன்….” என்று காலை கோவிலில் நடந்ததை கூறினான்.

இறைவனோ இதை கேட்டவுடன் மிகவும் அதிருப்தியடைந்தார். என்னடா இது, நம்மை பாராட்டுவார் என்று நினைத்தால் இப்படி கோபித்து கொள்கிறாரே என்று பணியாள் துணுக்குற்றான்.

“நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி நீ ஏன் நடந்துகொள்ளவில்லை? என்ன நடந்தாலும் பேசக்கூடாது, அசையக்கூடாது என்ற என் நிபந்தனைகளை நீ ஏன் மீறினாய்….

உனக்கு என் மீது நம்பிக்கை இல்லை. இங்கு வருபவர்களது மனநிலையை அறியாதவனா நான்?”

இறைவன் தொடர்ந்து பேசலானார்…. “செல்வந்தன் அளித்த காணிக்கை, தவறான வழியில் சம்பாதித்தது. அது அவனிடத்தில் மொத்தமாக உள்ள செல்வத்தில் ஒரு சிறு துளி தான். ஒரு துளியை எனக்கு காணிக்கையாக அளித்துவிட்டு, நான் பதிலுக்கு அவனுக்கு எண்ணற்றவைகளை தரவேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான்.

ஆனால் அந்த ஏழை கொடுத்ததோ அவனிடம் எஞ்சியிருந்த இருந்த ஒரே ஒரு ரூபாய் தான். இருப்பினும் என் மீது முழு நம்பிக்கை வைத்து என்னை வணங்க வந்தான். அன்போடு அதை கொடுத்தான்.

இந்த சம்பவத்தில், கப்பல் வியாபாரியின் தவறு எதுவும் இல்லை. இருந்தாலும், இன்றைக்கு அவன் திட்டமிட்டபடி கப்பல் பயணம் செய்தால், விபத்தை சந்திக்க நேரிடும்.

புயலில் தாக்குண்டு அவனும் அவன் கப்பலும் காணாமல் போயிருப்பார்கள். அதிலிருந்து அவனை காக்கவே அவனை தற்காலிகமாக திருட்டு பட்டம் சுமக்க செய்து சிறைக்கு அனுப்ப நினைத்தேன்.

அந்த ஏழைக்கு அந்த பணமுடிப்பு போய் சேரவேண்டியது சரி தான். அவன் அதை நான் கொடுத்ததாக எண்ணி போற்றுவான்.

இதன் மூலம் அந்த செல்வந்தனின் கர்மா ஓரளவாவது குறைக்கப்படும். அவன் பாவப் பலன்கள் துளியாவது குறையும். இப்படி ஒரே நேரத்தில் அனைவரையும் நான் ரட்சிக்க நினைத்தேன்.

ஆனால், நீயோ என் எண்ணங்கள் எல்லாம் உனக்கு தெரியுமென்று நினைத்து, உன் எண்ணங்களை செயல்படுத்தி அனைத்தையும் பாழ்படுத்திவிட்டாய்.” என்றான் இறைவன் கோபத்துடன்.

சேவகன், இறைவனின் கால்களில் விழுந்து தன் தவறுக்கு மன்னிக்க வேண்டினான்.

“இப்போது புரிந்துகொள். நான் செய்யும் அனைத்திற்க்கும் காரணம் இருக்கும். அது ஒவ்வொன்றையும் மனிதர்களால் புரிந்துகொள்ளமுடியாது.

அவர்களின் நலம் வேண்டியே நான் ஒவ்வொருப் பொழுதையும் கழிக்கிறேன். அவரவரது கர்மாவின் படி பலன்களை அளிக்கிறேன். நான் கொடுப்பதிலும் கருணை இருக்கிறது. கொடுக்க மறுப்பதிலும் கருணை இருக்கிறது.” என்றான் இறைவன் புன்னகைத்தபடி.

மீண்டும் உடலில் தங்க வைப்பதும் (பிறப்பு தருவது) திருவடியின் கீழ் வைப்பதும், (வீடுபேறு தருவது) இரண்டும் உனது விருப்பத்தின்படி உனது கணக்கின்படி தானே நடக்கும்.

நாயிற் கடையாம் நாயேனை
  நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
  வைத்திட்டு இருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
  என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
  கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. (8) (திருவாச.பா.503)

- நெற்றியில் கண்ணை உடையவனே! நாயினும் கடைப்பட்ட நாயினேனை விரும்பி நீதான் ஆட்கொண்டாய்.

- சூழ்ச்சியால் வரும் பிறவி பற்றிய இரகசியத்தை, உன்னிடமே ஒப்படைத்து விட்டு, சும்மா இருப்பது அல்லாமல், அது பற்றி ஆராயும் உரிமை உடையவனா நான்?

அதற்கான அதிகாரத்தை நானா பெற்றிருக்கிறேன்?

மீண்டும் உடலில் தங்க வைப்பதும் (பிறப்பு தருவது) திருவடியின் கீழ் வைப்பதும், (வீடுபேறு தருவது) இரண்டும் உனது விருப்பத்தின்படி தானே நடக்கும்.

இதைத்தான் “ஆண்டவன் கணக்கு” என்றும் “செயல்விளைவு தத்துவம்” என்றும் வேதாத்திரியம் சொல்கிறது.

## ஆண்டவன் கணக்கு

“தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்ப்பார்த்தால்
ஒப்புமோ இயற்கைவிதி? ஒழுங்கமைப்புக் கேற்றபடி
அப்போதைக் கப்போதே அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்படுவர் இதையுணரார்”! (மாக்கோலம்)

ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிட முடியும் என்று நீங்க கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்லன். அவனிடம் ஒரு நியதி இருக்கிறது.

நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையோ, கெட்டதையோ, உங்கள் நோக்கத்திற்குத் தக்கவாறு, செய்யும் திறனுக்குத் தக்கவாறு அவன் செயல் விளைவாகத் தருவான். அதுதான் அவன் கொடுக்கக்கூடிய வரம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் சமுதாயத்திற்கு நலம் தர வேண்டும், கடமை செய்கின்றோம் என்பது ஒன்று ஆயிற்று, இரண்டாவது நல்லதையே ஒவ்வொரு செயலிலும் செய்துகொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றல் நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்துவிடுகிறது.

ஆக இறைவனை உணர்ந்து கொள்வது என்பது சமுதாயத்திற்கு நலம் தருவதாகும். இந்த நோக்கம் வெற்றிபெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் நல்ல செயலை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அவ்வாறு செய்து பலன் காண வேண்டும். அதை மற்றவர்களுக்கும் பரப்ப வேண்டும்.

## 9. உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு.

“இந்த உலக வாழ்வை விடுவதும் உன் திருவடிகளில் வந்து சேர்வதும் பற்றி நினைப்பதற்கு நான் உரிமை உடையவனோ? இல்லை. இதுதானே அடிமைக்கு மிகவும் அழகு சேர்ப்பது.” என மாணிக்கவாசகர் இறைவனிடம் கேட்கிறார். இப்போது ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது.

கங்கை நதி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் ஒரு படகு. படகில் ஓடக்காரனும் சில பயணிகளும். பயணிகளுள் ஓர் அரைகுறை பண்டிதர்.

தான் படித்ததைப் பிறருக்குப் போதித்தாலே அவர் இன்னும் பலவற்றைக் கற்றிருக்க முடியும்.

ஆனால் கற்று விட்டோம் என்ற கர்வம் அவரை அதிகம் அலட்டிக்க வைத்தது. அவர் ஓடக்காரனிடம் தனது அறிவை பறைசாற்றத் தொடங்கினார்.

‘ஏய் ஓடக்காரா, இப்படி நீ தற்குறியாக இருக்கிறாயே? பகவத்கீதையை நீ படித்திருக்கிறாயா? என்று ஏளனமாக கேட்டார்.”

‘ஐயா, சாமி என் அப்பன் கூட அதை படித்ததில்லையே?’ என்றான் ஓடக்காரன்.

‘உனது வாழ் நாளில் கால் பங்கு மோசமாக போச்சு’ என பண்டிதர் சாபம் தருவது போல் சொன்னார்.

‘சரி திருக்குறளாவது படித்திருக்கிறாயா?’ என கேட்டார். அதற்கு ஓடக்காரன் ‘அதை நான் தொட்டது கூடகிடையாதே, சாமி’ என்றான்.

‘தண்டமே இரண்டு பங்கு உன் வாழ்க்கையை வீணாக்கி விட்டாயே, போகட்டும் பாகவதமாவது வாசித்திருக்கிறாயா’? என்றார்.

சிரமத்துடன் படகு செலுத்திக் கொண்டிருந்த ஓடக்காரன் தலை குனிந்து நின்றான்.

‘அதுவும் இல்லையா? உன் வாழ்க்கையில் முக்கால்வாசி நஷ்டமாகி விட்டது. இனி நீ என்ன செய்யப்போகிறாய்? கடவுளுக்குதான் வெளிச்சம்’ என்று பண்டிதர் சொல்லி முடித்தார்.

அப்போது கரை புரளும் வெள்ளம். அலையடித்து படகு கவிழ்ந்து விடும் என்ற நிலையில் நீந்தத் தெரிந்தவர்கள் நதியில் குதித்து நீந்திக் கரையேறினர்.

ஓடக்காரனும், பண்டிதரும் மட்டும் தத்தளிக்கும் படகில் இருந்தனர். ‘குதிங்க சாமி. இல்லேன்னா மூழ்கிடுவீங்க.’ என்று ஓடக்காரன் சொல்ல, ‘ஐயோ, எனக்கு நீச்சல் தெரியாதே...’ என்று பண்டிதர் சொன்னார்.

அந்த அவசரத்திலும் ஓடக்காரன், பண்டிதரிடம், ‘சாமி, எனக்கு கீதை, பாகவதம் திருக்குறளென்று எதுவும் தெரியாது. ஆனால் நீச்சல் தெரியும். இதெல்லாம் தெரிஞ்ச நீங்க இப்போ முழு வாழ்க்கையையும் இழக்கப்போறீங்களே’ என்று கூறி நதியில் குதித்துக் கரை சேர்ந்தான். பலவற்றைக் கற்ற பண்டிதர் பரிதவித்தார்.

இந்தக் கதை பகவான் ராமகிருஷ்ணர் கூறியது. இன்று மனிதர்களுள் பலரும் இப்படித்தானே செய்திகளை சுமக்கும் பொதி மாடுகளாக உள்ளனர்.

உலகைப்பற்றிய, இயற்கைப்பற்றிய, பிறரைப்பற்றிய செய்திகள் ஏராளம் அவர்களுக்குத் தெரியும். அனால் மனிதனுக்கு தன்னைப்பற்றிய அறிவும், ஞானமும் அதிகமில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று.

நான் யார்? நான் பிறந்ததற்கு நோக்கம் எதாவது உண்டா? எல்லோரையும் போலவே நானும் பிறந்து, இறந்து போய் விட வேண்டியது தானா? அல்லது எனது வாழ்க்கைக்கு ஒரு பயனுண்டா? என்றெல்லாம் யோசிப்பதே இல்லை.

தன்னைப் பற்றிய தகவல்கள் தான் மனிதனிடம் இன்று இருக்கிறது. அந்தத் தகவல்களே அவனை திருப்தியடையச் செய்திடுமா?

பஞ்சாங்கத்தில் இந்த நேரம் மழை பெய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மழை பற்றிய செய்தியை சொல்லியதால், பஞ்சாங்கத்தை பிழிந்தால் மழைநீர் வந்து விடுமா? என்று ராம கிருஷ்ணர் கேட்பார். சமய, சாஸ்திர நூல்களைப்பற்றியும் அந்த கேள்வியை கேட்பார்.

சிலருக்கு பால் எங்கிருந்து வருகிறது என்று தெரியும். சிலர் பாலைப் பார்த்திருக்கிறார்கள். சிலர் பாலை தொட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலரே பாலை பருக முடிகிறது.

அது போல சாஸ்திரங்களைச்சிலர் படித்திருக்கிறார்கள். சிலர் மேற்கோள் காட்டுகிறார்கள். ஒரு சிலரே சாஸ்திரம் கூறும் ஞானத்தையும், தெய்வசக்தியையும் உணர்கிறார்கள். பிறருக்கும் உணர்த்துகிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுக்கும், துறவிகளுக்கும் கூறும் போது முதலில் கடவுள். பிறகு உலகம். இந்த வகையில் தான் மனிதனின் கற்றலும், கவனமும் இருக்க வேண்டும் என்கிறார்.

அவ்வாறே அவர் வாழ்ந்தும் காட்டினார். லோக மாதாவைத் தரிசிப்பதிலும், தெய்வ ஞானத்தை பெறுவதற்கும் தமது ஆரம்ப கால வாழ்க்கையின் 12 ஆண்டுகளை செலவிட்டார்.

இறைவனிடத்தில் தன்னை முற்றிலுமாக கரைத்துக் கொண்டதால் ஊரார் ராமகிருஷ்ணரை பைத்தியம் என்றும், பித்தர் என்றும் ஏளனம் செய்தனர்.

அப்போது அவர் சுவாமி விவேகானந்தர் போன்ற தமது சீடர்களிடம் புன்னகையுடன் ‘உலக மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பைத்தியமாக இருக்கிறார்கள். சிலர் பணத்தின் மீது, சிலர் உடல் இன்பத்தின் மீது, வேறு சிலர் பெயர், புகழ் மீது பைத்தியமாக இருக்கிறார்கள்.

நான் இறைவன் மீது பைத்தியமாக இருக்கிறேன். இந்த எல்லா பைத்தியங்களுள் எது சிறந்த பைத்தியம்... சொல்லுங்கள்? என்று கேட்டு அவர்களை சிந்திக்க வைப்பார். சிரிக்க வைப்பார்.

இறைவனை பற்றிய ஞானம் அதிமுக்கியமானது. எதைப் பெற்றால் எல்லாம் பெற்றதற்குச் சமமோ அந்த அறிவைப் பெறுவதில் தான் ராம கிருஷ்ணரின் ஆர்வம் இருந்தது.

எந்த அறிவையும் பெறாமல் வாழ்வில் சொத்து, சுகம் என்று ஏனைய அனைத்தும் பெற்றிருந்தும் மனிதன் நிறைவான நிலையையும், நிம்மதியையும் அடைய முடியாதோ, அதில் ராமகிருஷ்ணர் கூடுதல் கவனம் காட்டச் சொல்கிறார்.

ராமகிருஷ்ணர் நமக்குக் காட்டுவது இந்த உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இதில் தர்மத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்து நீயும் முன்னேறி, பிறருக்கும் சேவை செய்து வந்தால் ஆனந்தமாக இருப்பது நீ மட்டுமல்ல, ஆண்டவனும் தான் என்பது தான்.

ஆண்டவனின் ஆனந்தத்தையே பெருக்கும் வாழ்க்கையை வாழக்கற்றுக் கொடுப்பது தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மிக வாழ்க்கை நெறி.

வீடு பேற்று நெறியை அறிவது எப்படி என கேட்கிறார். மாணிக்கவசாகர் திருவாசகத்தில். வேதாத்திரியம் விடை தருகிறது.

கண்ணார் நுதலோய் கழல் இணைகள்
  கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும் பகலும்நான்
  அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
  வந்து உன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
  அடிமை சால அழகுடைத்தே. (9) (திருவாச.பா.504)

- கண் உடைய நெற்றியனே! மகிழ்ச்சி பொங்க கண்ணார நினது இரண்டு திருவடிகளைக் கண்டேன்.

- இரவு பகல் என்று எந்நேரமும் நான் அதனையே நி  னைத்துக் கொண்டு இருக்கிறேன்.

இந்த உலக வாழ்வை விடுவதும் உன் திருவடிகளில் வந்து சேர்வதும் பற்றி நினைப்பதற்கு நான் உரிமை உடையவனோ? இல்லை. இதுதானே அடிமைக்கு மிகவும் அழகு சேர்ப்பது.

வீடு பேற்று நெறியை அறிவது எப்படி என கேட்கிறார். வேதாத்திரியம் விடை தருகிறது.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருள்கட் கெல்லாம்
வீடாகும். விண்கடந்த வானறிந்தால்,
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்.
வீடுபேறு எனும் உயர்ந்த பதமும் ஈதே!" (ஞாக.பா.1848)

நாம் நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளோம். உலகமோ சூரியக் குடும்பத்தில் மூன்றாவது வட்டப் பாதையிலே தற்சுழல் இயக்கத்துடன் சூரியனைச் சுற்றி வருகிறது.

சூரியக் குடும்பமோ பால்வெளி மண்டலத்தில் பலகோடி சூரியக் குடும்பங்களிலே ஒன்றாக சுழன்று கொண்டுள்ளது.

பால்வெளி மண்டலமோ, எண்ணிலடங்காத மண்டலங்களை உள்ளடக்கிக் கொண்டு சுழன்று கொண்டுள்ள பிரபஞ்த்தின் ஒரு பகுதியாக சுழன்று கொண்டுள்ளது.

பிரபஞ்சத்திற்கு அப்பாலும் சுற்றிலும் சூழ்ந்தும் உள்ள சுத்தவெளி என்னும் வெட்டவெளியின் ஒரு பகுதியில் பிரபஞ்சமே சுழன்று கொண்டுள்ளது.

ஆகவே பிரபஞ்சத்திலே நாம் காணும் சடப்பொருள், சீவன் ஆகிய அனைத்துத் தோற்றப் பொருட்களுக்கும் இடமாக வீடாக இருப்பது சுத்தவெளியாகும்.

உடல் பற்று, உலகியல் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற்றால் வீடுபேறு என்னும் உயர்ந்த நிலையை மனிதன் பெறலாம்.

இதைத்தான் "உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு" என வேதாத்திரியம் சொல்கிறது.

மனம்தான் மனிதனாக இயங்கிக் கொண்டுள்ளது. அந்த மனதை, மனத்திற்கு மூலமான விண் என்னும் உயிரில் ஒடுக்கிப் பழகினால், மன அலை நின்று நிலைக்கு வரும்.

மனதின் அடித்தளமாகிய அறிவில் நிலைத்தால் அறிவு விரிந்து. பிரபஞ்சத்தைக் கடந்து அப்பாலாக உள்ள சுத்தவெளியில் கலப்புற்று விடும்.

மனிதனின் சிற்றறிவைப் பேரறிவை உள்ளடக்கமாகக் கொண்ட சுத்தவெளியில் கலப்புறச் செய்வதே வீடுபேறு என்ற உயர்ந்த பதம் என்னும் பக்குவம் ஆகும்.

வீடுபேறு என்னும் பெரும் பதம் அடைந்தவர்கள் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடியவர்கள் ஆவர்.

நாமும் அவர்களைப் போல் வாழ்ந்து மற்றவர்களுக்கும் தொண்டாற்றி-இன்புற்று -ஆனந்தமாக வாழ்வோமாக!

## 10.பெரிய பதம்எனக்கு வேண்டும்

முக்தி என்றால் என்ன?

பிறப்பு-இறப்பு மீண்டும் பிறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுபட்டு பரம பதத்தை அடைவதே முக்தி எனப்படும்.

எண்ணிலடங்கா முற்பிறவிகளில் செயல் செய்து சேர்த்து வைத்திருக்கும் மிக அதிக அளவிலான சஞ்சித கர்மங்கள் தீருவதற்குள் ஒவ்வொரு பிறவியிலும் அதன் அளவை எஞ்சியுள்ள ஆகாமி கர்மங்கள் மூலம் அதிகரித்து வருகிறோம்.

எனவே கர்ம பலன்கள் தீர்ந்து நாம் முக்தி அடைவது என்பது நமது முயற்சியில்லாமல் தானாக நடைபெறாது.

பரமனை தெரிந்து கொள்வதால் மட்டுமே நாம் முக்தியடைய முடியும்.

எப்பொழுது ஞானம் அடைகிறோமோ அப்பொழுது நாம் சேர்த்து வைத்துள்ள மொத்த சஞ்சிதகர்மமும் ஆகாமி கர்மமும் அழிந்து விடும் என்று வேதம் கூறுகிறது.

மேலும் பரமனை பற்றிய ஞானத்தை அடைந்தவுடன் புதிதாக ஆகாமி கர்மம் சேராது.

எஞ்சியிருப்பது ப்ராரப்த கர்மம் மட்டுமே. எனவே பரமன் யார் என்ற ஞானம் அடைந்தபின் நம் வாழ்வு ப்ராரப்த கர்மத்தின் கட்டுப்பாட்டின்படி நடந்து அது தீர்ந்தவுடன் மீண்டும் பிறவா நிலையை அடைந்து விடுவோம்.

**எனவே, முக்தி என்றால்** முற்றுப்பெற்ற நிலையை குறிக்கிறது. இறையுணர்வு பெற்று இறைநிலையை உணர்ந்து புரிந்து அதோடு இணைந்து பேரின்ப நிலையை அடைதல் ஆகும்..

“அழகே புரிந்திட்டு அடிநாயேன்
  அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
  காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
  புராண நீதந்து அருளாதே
குழகா கோல மறையோனே
  கோனே என்னைக் குழைத்தாயே.” (திருவா.பா.505)

அழகனே! என்னை அடிமையாகக் கொண்டவனே! புகழாய் விளங்குபவனே! பழமையானவனே! மாறாாத இளமை உடையவனே! அழகிய வேதியனே! தலைவனே!

ஒளி விங்குகின்ற நினது திருமேனியைக் காட்டி, என்னை ஏவல் கொண்டாய்.

ஆனால் பதமுத்தி எதுவும் தந்து அருளாது என்னை வாட்டம் உறுமாறு செய்துவிட்டாய். நானும் புலம்பித் திரிகிறேன்.

இன்பம் இன்பம் இன்பம் இன்பம்

“பிறவியின் நோக்கத்தை அறிந்த போதும்,
  பின்அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறியில் விழிப்போடு பொறுப் புணர்ந்து,
  ஆற்றி மனம் செயல் தூய்மை ஆனபோதும்.
உறவுகளில் உண்மைநிலை உணர்ந்து ஆற்றி,
  உயர்வான துறவுநிலை உணர்ந்த போதும்,
துறவுநிலை முடிவாகப் பெற்ற போதும்,
  துய்த்த பேரின்பம் எவ்வாறுரைப்பேன்? (ஞாக.பா.1849)

வீடு பேற்று நெறியை அடியேன் அறிவது எப்படி? என்று மாணிக்கவாகவர் இப்பாடலில் வினா எழுப்புகிறார்.

ஆன்மீகப் பயணத்தில் வாழ்வின் நோக்கம் என்ன? எந்த மூலத்திலிருந்து வந்தோமோ அந்த மூலத்தை-- வெளியை அடைவதுதான் நோக்கமாக இருக்கும். இதற்கு இறையுணர்வு பெற வேண்டும். அறநெறி வாழ்க்கை வாழ வேண்டும்.

# துணைநின்ற நூல்கள்.

1. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. மாணிக்கவாசகர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. உள்முகப் பயணம், ஜெ.வெண்ணிலா, இணையதள முகநூல் பக்கம்.
5. இணையதள தகவல்கள்.
6. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
7. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
8. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
9. “யாதுமாகி” ஜெ.வெண்ணிலா, இணையதள முகநூல் பக்கம்.